# அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்று மதிப்பீட்டில் A+ (CGPA:3.64) தகுதி பெற்றது)

**காரைக்குடி – 630 003**

நாள்: 4.6.2019

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக நாட்டு நலப்பணித்திட்டத்தின் சார்பில் உலக சுற்றுச்சூழல் தினம் அழகப்பா பல்கலைக்கழக கல்வியியல் கல்லூரி வளாகத்தில் இன்று கொண்டாப்பட்டது. அதன் ஒரு பகுதியாக சுற்றுச்சூழல் விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும்வகையில் பல்கலைக்கழக மாணவ, மாணவியர் மற்றும் அழகப்பா மாதிரி மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர் கலந்து கொண்ட விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தப்பட்டது. இந்த ஊர்வலத்தை பல்கலைக்கழக துணைவேந்தர் பேரா. நா. இராஜேந்திரன் கொடியசைத்து துவக்கி வைத்தார். முன்னதாக துணைவேந்தர், பதிவாளர் மற்றும் பேராசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் சுற்றுச்சூழல் உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர்.




இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழக துணைவேந்தர் பேரா. நா. இராஜேந்திரன் பேசியதாவது: உலக சுற்றுச்சூழல் தினம் கொண்டாப்படுவதன் நோக்கம் உலக மக்கள் யாவரும் இந்த பூமியில் நலமுடன் வாழ வேண்டும் என்பதற்காகவே ஆகும். காற்று மாசுபடுதலை தடுப்பதே சுற்றுச்சூழல் தினத்தின் இந்த ஆண்டிற்கான முக்கிய கருப்பொருளாகும். இந்தியாவில் உள்ள பெருநகரங்களில் காற்று மாசுபடுவதை தடுப்பது என்பது ஒரு பெரும் சவாலாக உள்ளது. டெல்லி, மும்பை, கொல்கத்தா போன்ற அதிக மக்கள் தொகை கொண்ட நகரங்கள் காற்று மாசுபாட்டால் மிகவும் பாதிப்படைந்துள்ளன. காற்று மாசுப்பாட்டை குறைப்பதற்கு, மரம் நடுவதே எளிய சிறந்த முறையாகும் என்றார். இன்றைய சூழலில் நாம் ஒவ்வொருவரும் மரம் வளர்ப்பதே நாட்டிற்கு செய்யும் சிறந்த தொண்டாகும். நம் முன்னோர்கள் அனைவரும் மரங்களை வளர்த்து இப்பூமியை பசுமையாக வைத்து பாதுகாத்து வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதைப்போல நாமும் அவர்கள் வழியில் நிறைய மரங்களை வளர்த்து இயற்கையைப் பாதுகாப்போம் என்றார். இதன் மூலம் காற்று மாசுபடுவதை குறைப்பதுடன் சுத்தமான காற்றை பெறுவதற்கும் நலமுடன் நாம் வாழ்வதற்கும் இது வழிவகுக்கும் என்றார்.

உலக சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பல்கலைக்கழக பதிவாளர் பேரா. குருமல்லேஷ் பிரபு, கலைப்புல முதன்மையர் பேரா. முருகன், பல்கலைக்கழக பேராசிரியர்கள் தர்மலிங்கம், ஆறுமுகம், கிருஷ்ணமூர்த்தி, சிவக்குமார், ஜோதிபாசு, சரவணக்குமார், கல்வியியல் கல்லூரி முதல்வர் முனைவர் பாலு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பேரா.ஹா.குருமல்லேஷ் பிரபு
பதிவாளர்